மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

சிவமயம்.

சிவஞானதேசிகர்

திருவாய்மலர்ந்தருளிய

பஞ்சாக்ஷரப்

# பதிபசுபாசவிளக்கம்.

இஃது

சிதம்பரம்

அ. இரத்நசபாபதி முதலியாரவர்களால்,

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS:

PRINTED AT ST. JOSEPH'S PRESS.

POPHAM'S BROADWAY.

1888.

*Copy Right Reserved.*

ஸ்ரீஸத்குரவேநம:

பஞ்சாக்ஷரப்

# பதிபசுபாசவிளக்கம்.

## காப்பு-பாயிரம்.

மூலமாயெவைக்கு மறியொணாவுருவாய் மும்மலங்களைந்த வர்க்கெளிதாய், ஆலபோஜனஞ்செய் தழிவிலாதவனா யருமறைச்சிரதகொளிர் பவனாய்ப், பாலலோசனனாய்ப் பசுதொறும்பதியாய்ப் பக்குவசனகனாதியர்க்காய், ஆலமாநீழலமர்ந் துறைபவனை யகத்தவிசிருத்தியின்படைவாம். (௧)

(வேறு.)

முன்னைநான்மறை முடிவினில்வீற்றிருப்பவனை
அன்னையத்தனா யுலகெலாமமர்ந்திடுபவனை
என்னையாளுடை யிறைவனையிருண்மலங்கிழியப்
பொன்னினம்பலத் தாடியபுனிதனைத்தொழுவாம். (௨)

பாசமைந்தையுந் தனித்தனிபறிந்திடநீக்கி
நேசமாகிய வறிவுருநீயெனக்காட்டிப்
பேசுமேழ்வகைப் பிறப்புனக்கிலையெனப்பேசித்
மாசுநீக்கிய சூக்ஷமப்ரகாசனைத்தொழுவாம். (௩)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

(வேறு.)

தாரணியவர்க்குநாலாஞ் சத்திநிபாதமெய்த
ஊருணிபோலத்தோன்றி யொருமொழியாலெனக்குக்
கோரணிகாட்டுமாறு சமயத்தின்கோளைநீக்கிப்
பூரணசொருபங்காட்டும்புண்ணியன்பொலன்றாள்போற்றி (௪)

பொய்ப்புவியதனினாளும் பொருமெனத்தோன்றிமாயும்
இப்புவியுயிர்கட்கெல்லா மெளிதினின்ஞானமெய்த
அப்பணிசடையோன்முன்னமறைந்தவாகமத்திற்சொல்லும்
முப்பொருள்விளக்கஞ் சொல்வேன் முக்கணனருளைக்கொண்
[டே. (௫)

பாயிரம் முற்றும்.

நூல்.

## பதிவிளக்கம்.

அஞ்சினேன்பவத்துக்கென்னை யாளெனவடியில்வீழ்ந்த
வஞ்சமில்சீடன்றன்னை வாவெனவருகில்வைத்துத்
துஞ்சிருள்கிழியப்பாத தாமரைசிரத்திற்சூட்டி
அஞ்செழுத்தருளிப்பின்ன ரதன்பொருளறையலுற்றார். (க)

(வேறு.)

அஞ்செழுத்தினி லொருபுடைபதியெனவமரும்
வஞ்சமுற்றுள வொருபுடைபாசமாய்வதியும்
துஞ்சலின்றிய விடையினிற்பசுவெனத்துலங்கும்
அஞ்செழுத்தினின் மும்முதலறிந்தவர்பிறவார். (உ)

(வேறு.)

பானுவாமிறையெழுத்து வதனொளிபரையெழுத்து
ஊனமில்கண்ணேயாகு முயிரொனுந்தனியெழுத்துத்
தீனமில்விளக்கேயாகுஞ் செப்பியதிரையெழுத்து
காணெனுமிருளேயாகு நவையுறுமவ்வெழுத்தே. (௩)

(வேறு.)

நகரமாகியசேரியை நஞ்செனவெறுத்து
மகரமாகியமயலெலாம் வேரொடுமறுத்து
வகரமாகியவனத்தினி லிருந்திளைப்பாறிச்
சிகரமாகியநகரினை யடைந்தனன்சீவன். (௪)

பாசமாகியவிரண்டையும் படிறெனத்தள்ளி
நேசமாகியவிரண்டையு நெஞ்சிடையழுத்திக்
காசநீங்கியகண்ணென முத்தியைக்காண்பாய்
ஆசைநீங்கியநிலையிது விதற்கிலையையம். (௫)

(வேறு.)

நிராமயமாய்நிஷ்களமாய் நித்தியமாய்நின்மலமாய்ப்
புராதனமாயசஞ்சலமாய்ப் பூரணமாய்ப்புனிதமாய்ச்
சராசரமாய்ச்சாட்சியாய்ச் சத்தியமாய்ச்சித்துருவாய்ப்
பராபரமாய்வெறுவெளியா யிருக்குமந்தப்பரமசிவம். (௬)

சொல்லாலுமனத்தாலுந் தொடராதசூக்குமமாய்ப்
பல்லாண்றகேள்வியரு மீதென்றுபகர்வரிதாய்
ஒல்லாதபரஞ்சுடரா யுயிர்க்குயிராயுண்மையுமாய்
எல்லாமாயல்லவுமா யிருக்குமந்தப்பரமசிவம். (௭)

(வேறு.)

பதிபசுபாசமூன்றும் பகுத்தறிந்தவரேமுத்தர்
பதியொன்றும்பற்றாதாகும் பசுவொன்றைப்பற்றிநிற்கும்

பதிமுகந்தெரியாவண்ண மறைப்பதுபாசமாகும்
பதிகுருவானஞான்று நீங்குமப்பாசந்தானே. (௮

கண்பலபொருளைப்பற்றிக் கதிரினையிழந்துநிற்கும்
கண்பலபொருளைப்பற்றாதா யிடிற்கதிரைக்கூடும்
புண்புலன்பற்றியாவி புனிதனைப்பிரிந்துநிற்கும்
புண்புலன்பற்றாதாயிற் புனிதனைச்சேருமன்றே. (௯

பளிங்கியமானனாகும் பகலவனிறைவனாகும்
பளிங்கினிற்பஞ்சவன்னம் பார்க்கிலைம்புலன்களாகும்
பளிங்கினில்வன்னம்பற்றும் பகலவன்பக்கஞ்சாரில்
பளிங்கினில்வன்னம்பற்றா வுச்சியிற்பானுவந்தால். (௰

பதியறிவாகுமத்தைப் பகுத்தறிவதுவேசீவன்
இதுவதுவோவென்றுன்னற் கிடமதேபாசமாகும்
அதுவிதுவெனுஞ்சூக்ஷ்மத்தா லறவறிவாகிநிற்கும்
மதுவிரிகொன்றைத்தாரான் மலரடிகாணலாமே. (௰௧

செம்புயிராகுமந்தச் செம்பினிற்களிம்புபாசம்
செம்பினிற்களிம்புபோனாற் செம்பொனுமாறுபோல
நம்பனார்ஞானத்தாலே நானெனுமகம்போம்போனால்
நம்பனாரவனேயென்று நான்மறைசொல்லுமன்றே. (௰௨

சாக்கிரசொப்பனங்க ளிரண்டையுந்தாண்டிப்போனால்
சூக்கமாஞ்சுழுத்திவந்து தொல்லிருளாகிமூடும்
ஆக்கமுமழிவுமில்லா வறிவினாலதுவும்போனால்
போக்கொடுவரவுமில்லாப் பூரணப்பெருள்வந்தெய்தும். (௰௩

பதிவிளக்கம் முற்றும்.

## பசுவிளக்கம்

பாசத்தாற் *பாசியாகிப் பலபலபிறப்பிற்சென்று
பாசத்தாற்பிறந்திறந்து பலபலபோகந்துய்த்துப்
பாசத்தாளாரப்போக்கிப் பதித்துவம்பதித்தநாதன்
பாசத்தைகினைக்குந்தோறும பசுத்துவங்கழலுமன்றே (க)

(வேறு.)

தூலதனுவுநானல்லேன் சூக்கதனுவுநானல்லேன்
மூலத்தனுவுநானலலேன் மும்மைத்தனுவும்பொய்யன்றோ
ஞாலத்தனுவைநானென்றே நம்பிக்கெட்டேனெடுங்காலம
சாலத்தெளிந்தேனினி ஞானத் தனுவேயெனக்குத்தனுவென்
[றே. (உ)

(வேறு.)

ஐம்பொறிவனத்திடை யாவிவேடனூர்
வம்புறுபோதவில் வளைத்துமாழ்குறுந்
துன்பெனுங்கணையினைத் தொடுத்துமெல்லநின்
றின்பெனுமறியின மிரியவெய்யுமால். (௩)

(வேறு.)

அன்பனைவிட்டுமற்றோ ரவலனைவிரும்பிப்பின்னர்த்
துன்புறுவார்கள்போலச் சுயம்பிரகாசனாகும்
நண்பனைவிட்டுப்பொல்லா ஞாலத்தைவிரும்பிப்பின்னர்த்
துன்புறுவார்களந்தத் துயரினுக்கொழிவுமுண்டோ. (௪)

கானலைநீரொன்றுன்னிக் காதலித்திடுவார்போல
ஊனுடனொன்றுன்னி யுணர்வினைப்பிரிந்துநின்றேன்
கானலைநீரன்றென்று கைவிடுவார்கள்போல
ஊனுடனன்றென்று வுணர்வொடுமுறங்கினேனே. (௫)

---

*பாசி=பாசத்தையுடையவன்; பசுபாசி ஒருபொருட் சொற்கள்.

MAHAMAHOPADHYAYA
... U. V. SWAMINATHA IYER LIBRARY

(வேறு.)

அறிவிலறிவாயகண்டிதமா யனந்தானந்தமயமாகிச்
செறியும்பரமசிவந்தன்னைத் தன்னுட்கண்டுதியானித்துக்
கறவையருந்தப்பால்சுரக்கும் காலமேனுங்கடைபிடிப்போர்
பிறவிக்கடலைக்கடந்தோர்க ளவரேயுலகிற்பெரியோரே. (சு)

(வேறு.)

மன்னையுமறந்துமிக்க வனசரர்வடிவாகித்
தன்னையுமறந்திருந்த தனையனைப்போன்றுநீயும்
என்னையுமறந்தைம்போத வெயினர்தம்வடிவமாகி
உன்னையுமறந்தாய்நீயென் னுருவெனவுணர்ந்துகொள்ளே (எ)

காணுறுபுலன்கள்போகக் கரிசுறுமனம்போம்போனால்
ஆணவம்போகும்போனா லாருயிர்ப்போதம்போகும்
சேணுறுமொளிக்குமேலாஞ் சிவப்பிரகாசந்தோன்றும்
மாணனேயிதுவேமுத்தி நிலையெனமதித்திடாயே. (அ)

பசுவிளக்கம் முற்றும்.

## பாசவிளக்கம்

ஆணவமலமான்மாவுக்கனாதியிலியற்கையென்னில்
ஆணவமலத்தைநீங்கியமலனையடையாதாவி
ஆணவமலமான்மாவுக்கனாதியில்செயற்கையென்னில்
ஆணவமலத்தைநீங்கியமலனையடையுமான்மா. (க)

மாயையேயுடலமாகு மாயையேகரணமாகும்
மாயையேபுவனமாகு மாயையேபோகமாகும்
மாயையேபொறிகளாகு மாயையேபுலன்களாகும்
மாயையேயண்டபிண்ட மியாவையுமாயையாமே. (உ)

வினையினால்விகாரமுண்டாம் விகாரத்தால்விருப்புண்டாகும்
உனலுறுவிருப்பானுறு விதவுலகங்களுண்டாம்
நனியுலகத்தாலெலலா நானெனுமகமுணடாகும்
துனியுடையகங்காரத்தாற் றுஞ்சலும்பிறப்புமுண்டாம். (ந)

மாசறப்படித்தானேனு மயலறத்தெளிந்தானேனும்
ஆசறத்துறந்தானேனு மஞ்செழுத்தறிந்தானேனும்
ஈசன்வேறியான்வேறென்னு மிருமைபுங்கழலானுகில்
பாசமுமகல்வதின்றாம் பதித்துவந்தானுமின்றே. (ச)

பளிங்கினில்வன்னம்பற்றும் பகலவன்பக்கஞ்சாரில்
பளிங்கினிலவன்னம்பற்றாப் பகலவனுச்சிசாரில்
விளங்குயிரிறையைக்காணு வேலையிற்புலன்கள்பற்றும்
விளங்குயிரிறையைக்காணும் வேலையிற்புலன்பற்றாவே. (ரு)

(வேறு.)

அறிவறியாமையை யகன்றவாருயிர்
அறிவறியாதபே ரருளைக்கூடிடில
பிறிவறியாதவெம் பிரானுட்கொண்டுபோய்ப்
பிறிவறியாவகை வைக்கும்பின்னையே. (சா)

உடம்பெலாநீங்கிநல் லுடம்புபெற்றவர்
உடம்பினாலுறுபய னென்றுமோர்கிலர்
உடம்பினாலுறுபய னுவதென்னைகொல்
உடம்புயிர்சிவனையு மோரலாகுமோ. (எ)

பெரியவிம்மானிட யாக்கைபெற்றவர்
சரியையுங்கிரியையுந் தான்செய்கின்றிலர்
சரியையுங்கிரியையுந் தான்செயாவிடில்
உரியயோகத்தினை யுணரலாகுமோ. (அ)

அரியவிம்மானிட யாக்கைபெற்றவர்
கருமயோகங்களாற் காலந்தள்ளுவார்

உரியமெய்ஞ்ஞானயோ கத்தினாலரன்
றுரியஞானத்தினைச் சோதியார்களே. (௬

(வேறு.)

ஒருகணமிருப்பன்றேய வுருவினிலீசன்றான்மற்
றிருகணஞ் செங்கோலோச்சு மிறையவன்பாலிருப்பன்
அருமறையவர்குழாத்து ளம்புவீழளவிருப்பன்
றுரியஞானிகளுளத்திற் றாங்குவனிருந்தெப்போதும். (௰

சத்தத்தாலசுணமாயும் பரிசத்தாற்றந்திமாயும்
வெற்றிசேருருவத்தாலே விட்டிலம்பறவைமாயும்
பற்றியாரிரதத்தாலே பாணிமீனினங்கண்மாயும்
மொய்த்தகந்தத்தினாலே மூசுவண்டினங்கண்மாயும். (௰௧

(வேறு.)

ஐம்புலன்வழி யோடிமானிடரெலாமழிவார்
ஐம்புலன்வழி யோடிமேலமரருமழிவார்
ஐம்புலன்வழி யடைத்தவனியோகியேயன்றி
ஐம்புலன்வழி யடைத்தவருலகினிலியாரே. (௰௨

(வேறு.)

ஐம்புலனடக்கலாலு மறவினையறிதலாலும்
இன்பதுன்பங்களெல்லா மியல்பெனவொறுத்தலாலும்
செம்பொருளறைதலாலுஞ் சிவோகம்பாவித்தலாலும்
நம்பனையகத்துணர்ந்த ஞானியென்றறியலாமே. (௰௩

வேதநூலுணர்தலாலும் விதிவழியொழுகலாலும்
சூதகந்துறத்தலாலுஞ் சுகமயமாதலாலும்
பேதமற்றிருக்கையாலும் பெரியவர்கூட்டத்தாலும்
நாதனையகத்துணர்ந்த ஞானியென்றறியலாமே. (௰௪

(வேறு.)

மண்போற் பொறுமை யுடையோரு மதிபோற்சாந்த முடை
யோரும், புண்போலுடலைப் புனைந்தோரும் புனல்போலொ

ழுக்கம்பூண்டோரும், கண்போலிரக்க முடையோருங் கன
ல்போற்புசிக்குங் கதியோரும், விண்போலறிவை யறிந்தோ
ரும் பிறவாரிந்தமேதினிக்கே. (௰௫)

எந்தக்குலத்திற்பிறந்தாலு மீசனடியார்க்கிழுக்கில்லை
நிந்தைசெய்தோர்நரகுறுவார் நித்தனுணையையமில்லை
மைந்தரோடு மனையோடு மாளாதிருந்தநிதியோடும்
எந்தையடியார்மனங்கலங்கிலீரேழுலகுங்கலங்காவோ. (௰௬)

(வேறு.)

காமத்தாலிந்திரன் கலக்கமெய்தினன்
காமத்தாலிராவணன் கருத்தழிந்தனன்
காமத்தாற்கோசிகன் கவலையுற்றனன்
காமத்தாலிறந்தவர் கணக்கிலார்களே. (௰௭)

(வேறு.)

கோபத்தாற்கோசிகன் றவத்தைக்கொட்டினன்
கோபத்தானகுடனுங் கோலமாறினன்
கோபத்தாலிந்திரன் குலிசம்போக்கினன்
கோபத்தாலிறந்தவர் கோடிகோடியே. (௰௮)

கோபமேபிறவியைக் கொடுக்குங்கொள்கலம்
கோபமேதனுவினைக் குறைக்குங்குட்டநோய்
கோபமேதாயையுங் கொல்லுந்திண்படை
கோபமேதவத்தினைக் குலைக்கும்பேயரோ. (௰௯)

ஆசையாற்சந்திர னங்கந்தேய்ந்தனன்
ஆசையாற்சௌபரி யறிவைநீக்கினன்
ஆசையானராசுர னுவிபோக்கினன்
ஆசையால்வருந்துயர்க் களவுண்டாங்கொலோ. (௨௰)

(வேறு.)

சித்தஞ்சிவத்தோ டொருக்கிச்சிவமான
முத்தன்சிவனென மொழிந்திடுமாகமம்

சத்தியஞ்சிவன் சங்கரனென்றே
குற்றமிளுன்மறை கூறும்வகுத்தே. (உக)

(வேறு.)

சாத்திரஞ்சமயம்வேண்டார் தத்துவக்கத்தும்வேண்டார்
கோத்திரங்குலங்கள்வேண்டார் கூறுமால்விரதம்வேண்டார்
மூர்த்திசேவையுமேவேண்டார் முன்னவன்பூசைவேண்டார்
தீர்த்தமும்வேண்டார்ஞான சின்மயமானமேலோர். (உஉ)

உம்பர்வாழுலகம்வேண்டா ருலகரசாட்சிவேண்டார்
பொன்புனைமகளிர்வேண்டா புண்ணியபாவம்வேண்டார்
இன்பொடுதுன்பம்வேண்டா ரிறப்பொடுபிறப்பும்வேண்டார்
ஐம்புலப்பகையைவேண்டா ரறிவினையறிந்தமேலோர். (உங)

பிதிர்க்கடம்பூசையாவும் பேசியபாசத்தன்மம்
ஏப்பொழிற்றடாகமாதி புகல்பரதன்மமாகும்
ஏக்குறைவறிஞர்பூசை முப்புரதகனன்பூசை
க்கருமாசான்பூசை சொலிற்சிவதருமமன்றே. (உச)

(வேறு)

ஆதலாற்குருப்பிரா னதிகமென்றுநால்
வேதமுமுறையிடும் விவேகியானவன்
போதொடுநீரொடும் போற்றிநாடொறுங்
காதலாற்குருபதங் கைவிடானரோ. (உரு)

(வேறு.)

அம்மாவெனவலற வாருயிரைக்கொன்றருந்தி
இம்மானிடரெல்லா மின்புற்றிருக்கின்றார்
அம்மாவெனுஞ்சத்தங் கேட்டகன்றமாதவர்க்கும்
பொய்ம்மாயையமெனிற் புசித்தவர்க்கென்சொல்லுவதே.()

(வேறு.)

கங்கையிற்படிந்திட்டாலுங் கடவுளைப்பூசித்தாலும்
மங்குல்போற்கோடிதானம் வள்ளலாய்வழங்கினாலும்

சங்கையில்லாதஞான சாஸ்திரமுணர்ந்திட்டாலும்
பொங்குறும்புலால்புசிப்போன்போய்நரகடைவனன்றே. ()

கலையெலாமுணர்ந்தானேனுங் கரிசறத்தெளிந்தானேனும்
மலையெனவுயர்ந்தானேனு மனமயலகன்றானேனும்
உலகெலாம்புகழப்பல்லோர்க் குதவியகையனேனும்
இலகியவிரக்கமின்றே லெழுநரகடைவனன்றே. (உஅ)

கொலையிலானுதவுமன்னங் கூறிற்பேரமுதமாகும்
கொலையினனளிக்குமன்னங் கூறில்வல்விடமதாகும்
கொலையினனளிக்குமன்னங் கொடும்பவமளிக்குமூலம்
கொலைஞர்தம்மனையிலுண்பான் கொலைஞனேயாவனன்றே.()

இத்திறனருள்கைப்பற்றி யுயிர்க்கெலாமிதத்தைச்செய்க
சத்தியமிரக்கமின்றேன் முத்தியைச்சார்கிலார்சற்
பத்தியாலியோகஞ்சாரும் யோகத்தாற்பரமஞானம்
சித்தியாமிதற்காதாரஞ் சீவகாருண்யமன்றே. (௩௰)

(வேறு.)

மூன்றாயும்பலவாயு முருவாயுமருவாயும்
குன்றாயுமணுவாயுங் குணமாயுங்குணியாயும்
நன்றாய்ந்தாயு நானுயுந்தானுயும்
ஒன்றாயுமுளதாயு மிருக்குமந்தப்பரமசிவம். (௩க)

(வேறு.)

மன்னுமாலயனொடு வானுமவையமும்
பின்னமுமபின்னமும பேசுஞ்சீவனும்
பன்னுமாணவமுதற் பாசம்யாவையும்
உன்னுமிச்சிவத்திடை யுதித்தொடுங்குமால். (௩உ)

(வேறு.)

ஒன்றுமிருந்தபடியிருக்கு மியல்பேயென்னுமொருவேதம்
ஒன்றேயொழியவிரண்டாவ தில்லையென்னுமொருவேதம்
அன்றிப்பரமுநீயும்வே றில்லையென்னுமொருவேதம்
என்றுமதுவேநீயானு யென்றேசொல்லுமொருவேதம்.(௩௩)

(வேறு.)

நாலுவேதமுஞ் சொலுகிலையாவையுநவின்றேன்
சாலநீதெளிந் துறுதிகொள்வாயெனச்சாற்றிப்
பாலலோசனன் மௌனமுற்றிருந்தனன்பருவக்
கோலமாணவ னிட்டையைக்கூடினனன்றே. (௯௪)

(வேறு.)

ஊசலாடுளமுமின்றி யுணருருவருவமின்றிக்
கோசரவகோசரங்கள் குறிகுணபேதமின்றிப்
பாசஜாலங்கடந்து பராபரைக்கப்பானின்ற
ஈசனையறிந்தஞானிக் கினிப்பிறப்பில்லையன்றே. (௯௫)

சிறையறக்கடலொடுங்குஞ் செழுநதிக்குலங்கள்போலும்
மறுகுறுவேடுநீக்க மன்னனைக்கூடல்போலும்
அறிவறியாமைநீங்க வறிவினுளறிவாய்நின்ற
இறைவனையறிந்தஞானிக் கினிப்பிறப்பிலலையன்றே. (௯௬)

இந்நூலைப்பருவமில்லா வீனர்தமக் கீந்தக்கால்
முன்னூலைச்சூத்திரன்பால் மொழிந்தகரிசுறுகின்றான்
நன்மாலைகுரங்கறியா நலம்போலு ஞானத்தைத்
துன்மார்க்கரறியாத தோற்றமபோலுந்துணிந்தே. (௯௭)

பஞ்சாக்ஷரப் பதிபசுபாச விளக்கம்

முற்றிற்று.

ஆக - கவி ௱௰௯.

# விளம்பரம்.

| நெ. | புத்தகங்கள். | | விலை. | | தபால். | |
|---|---|---|---|---|---|---|
| | **கிரந்தாட்சரம்.** | | ரூ. | அ. | அ. | பை. |
| 1 | 2-வாலம் பாகவதவியாக்கியானம் | ... | 8 | 0 | 14 | 0 |
| 2 | 3-வாலம் இராமயண வியாக்கியானம் | ... | 8 | 0 | 14 | 0 |
| 3 | இராமாயணம் உத்திரகாண்டத்துடன | ... | 3 | 8 | 10 | 0 |
| | **தமிழ்.** | | | | | |
| 4 | 18-பர்வம் பாரதவசனம் | ... | 4 | 8 | 12 | 0 |
| 5 | 4-வாலம் ஷை ,, | ... | 5 | 0 | 14 | 0 |
| 6 | பெரியபுராணம் படத்துடன் வசனம் | ... | 3 | 8 | 6 | 0 |
| 7 | ஷை புதியபதிப்பு. | ... | 2 | 8 | 6 | 0 |
| 8 | திருவிளையாடல் படததுடன் வசனம் | ... | 2 | 8 | 6 | 0 |
| 9 | ஷை 65 படத்துடன் செய்யுள் | ... | 2 | 4 | 4 | 0 |
| 10 | கந்தபுராணம் வசனம் | ... | 2 | 6 | 6 | 0 |
| 11 | கம்பராமாயண வசனம் | ... | 2 | 4 | 6 | 0 |
| 12 | சிவதருமோத்தரம் | ... | 2 | 8 | 5 | 0 |
| 13 | சித்தியார் சுபட்சஉரை | ... | 2 | 8 | 4 | 0 |
| 14 | நன்னூல் விருத்தியுரை | ... | 2 | 8 | 4 | 0 |
| 16 | பாகவத வசனம் | ... | 2 | 8 | 6 | 0 |
| 15 | வைணவ பக்தவிஜயம் | ... | 2 | 8 | 5 | 0 |
| 17 | ஞானவாசிட்டம் | ... | 2 | 8 | 5 | 0 |
| 18 | திருஞான சம்பந்த சுவாமி தேவாரம் | ... | 2 | 0 | 4 | 0 |
| | திருநாவுக்கரசு தேவாரம் | ... | 2 | 0 | 4 | 0 |
| 20 | சுந்தரமூர்த்திசுவாமி தேவாரம் | ... | 0 | 12 | 1 | 6 |
| 21 | காசிரகசியம் உரையுடன் | ... | 2 | 0 | 2 | 0 |
| 22 | பதார்த்தகுண சிந்தாமணி | ... | 2 | 8 | 2 | 0 |
| 23 | மார்க்கண்டேய புராணவசனம் 24-அத்தியாயம வரையில் | ... | 1 | 4 | 2 | 0 |
| 24 | அகத்தியத்திரட்டு or அருட்பா | ... | 1 | 0 | 2 | 0 |
| 25 | அகஸ்தியர் வைத்தியசில்லறைக்கோர்வை | | 1 | 0 | 2 | 0 |
| 26 | சிவபூசைத்திரட்டு பஞ்சதலதேவாரம் | ... | 0 | 14 | 1 | 0 |
| 27 | சங்கரவிஜயம் வசனம் | ... | 0 | 12 | 1 | 0 |
| 28 | வள்ளலார் சாத்திரம் | ... | 0 | 12 | 1 | 0 |
| 29 | பிரமோத்திரகாண்டம் | ... | 0 | 12 | 1 | 0 |
| 30 | காசிகாண்டம | ... | 0 | 12 | 1 | 0 |

| நெ. | புத்தகங்கள். | | விலை. | | தபால். |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | அ. | அ. | பை |
| 31 | கருடபுராணம் படத்துடன்வசனம் ... | 0 | 10 | 1 | 0 |
| 32 | சீகாழித் தலபுராணம் ... | 0 | 8 | 2 | 0 |
| 33 | காசிமான்மியம் தலயாத்திரை பொதுவிதி | 0 | 8 | 1 | 0 |
| 34 | சிதம்பர புராண மூலம் ... | 0 | 12 | 1 | 6 |
| 35 | கடவுள்மாலை ... | 1 | 0 | 1 | 6 |
| 36 | திருப்போரூர் சந்நிதிமுறை ... | 0 | 6 | 1 | 0 |
| 37 | திருத்தணி சந்நிதிமுறை ... | 0 | 4 | 1 | 0 |
| 38 | நற்புத்திபோதம் ... | 0 | 4 | 1 | 0 |
| 39 | சிவசிவவெண்பா சோமேசர்வெண்பா ... | 0 | 2 | 0 | 6 |
| 40 | ஔவைகுறள் ... | 0 | 2 | 0 | 6 |
| 41 | படிக்காசு புலவர் செய்தருளிய கலம்பகம் | 0 | 2 | 0 | 6 |
| 42 | சதாசிவரூபம் உரை ... | 0 | 2 | 0 | 6 |
| 43 | திருமுருகாற்றுப்படை மூலமும் பரிமேலழகருரையும் ... | 0 | 2 | 0 | 6 |
| 44 | காந்தமகாசங்கிரகம் .. | 0 | 2 | 1 | 0 |
| 45 | திருவாலங்காட்டு புராணசுருக்கம் ... | 0 | 2 | 0 | 6 |
| 46 | சிவராத்திரி புராணவசனம் ... | 0 | 2 | 0 | [illegible] |
| 47 | தொண்டமண்டல சதகம் ... | 0 | 2 | 0 | 0 |
| 48 | காளிதாசன் சரித்திரம் .. | 0 | 4 | 1 | [illegible] |
| 49 | யாப்பிலக்கண சூசனம் ... | 0 | 2 | 0 | 6 |
| 50 | பொன்னளந்த பெருமான்கதை ... | 0 | 1 | 0 | 6 |
| 51 | உமாபதி சிவாச்சாரியார் செய்தருளிய நெஞ்சுவிடுதூது ... | 0 | 1 | 0 | 0 |
| 52 | திருக்கழுக்குன்றப்பதிகம் ... | 0 | 1 | 0 | 0 |
| 53 | சிவோத்கர்ஷ தீபிகை ... | 0 | 1 | 0 | 6 |
| 54 | திருத்தணிகைப்பதிற்றுப் பத்தந்தாதி .. | 0 | 1 | 0 | 6 |
| 55 | பஞ்சாக்ஷரப் பதிபசு பாசவிளக்கம் ... | 0 | 1 | 0 | 6 |
| 56 | சிவாதித்யரத்நாவளி பாகம் 1. 2. ... | 3 | 8 | 2 | 0 |
| 57 | இராமலிங்க சுவாமி அருட்பா ... | 1 | 12 | 2 | 0 |
| 58 | சித்தாந்தசேகரம் சமரசஞானதீபம் ... | 0 | 14 | 1 | 0 |

வால்யூ பேயெபிளில் கேட்போர்தபாற்கூலியை முன்னனுப்புக.

சிதம்பரம், அ. இரத்நசபாபதி முதலியார்

1வது நம்பர் குமரப்ப முதலி தெருவு, சென்னை

1314

மகாமகோபாத்யாய, டாக்டர்